20th January 1961]

முடியாத அளவுக்கு ஏரிக் கால்கள் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியுமானால் துரிதமாக அதை மராமத்து செய்ய கவனம் செலுத்தப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஏரியில் வண்டல் எடுப்பதைப் பொறுத்த மட்டில் அந்த வேலையை கிராமத்தார் செய்யவேண்டும். அவர்கள் செய்யவில்லை. மற்றபடி கரையும் சரியாக இல்லாததனால்தான் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு ரிப்பேர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் அந்த வேலை பூர்த்தியாகும்.

Untouchability

*12 Q.—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்துக்காக சினிமாப் படங்கள் தயாரிப்பதுபற்றி அரசாங்கத்தின் மூலமாக பரிசிலனை நடத்தப்பட்டு வருகிறதா?

(இ) அப்படியானால் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) No, Sir.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM: இவ்வித தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கு சினிமாப் படம் தயாரிப்பது பற்றி மத்திய சர்க்கார் சென்னை சர்க்காரைக் கலந்து ஆலோசித்தார்களா? அவ்வாறு ஆலோசித்து இருப்பின் அந்த விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

Poramboke lands in Vadugapatti

MR. SPEAKER: As the hon. Member who gave notice of Question No. 13 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*13 Q.—SRI K. R. NALLASIVAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஈரோடு தாலுகா, வடுகப்பட்டி கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களின் விஸ்தீரணம் என்ன?

(இ) இவைகளில் எத்தனை விவசாயிகள் சிவாஜிமா முறையின் கீழ் விவசாயம் செய்து வருகின்றனர்?

(உ) எத்தனை எக்கர்?

(எ) அந்த விவசாயிகள் மேற்படி நிலங்களுக்குப் பட்டா கொடுக்கக் கோரினரா?